வந்தது, அவரையும் உடனடியாகக் குணப்படுத்திவிட்டோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) குளச்சல் நகராட்சி, குப்பைகள் அகற்றப்படுதல் மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்துதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்ன சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகராட்சியில் 24 வார்டுகள், 27 ஆயிரம் மக்கள் தொகை. கடல் சார்ந்த பகுதி. சுமார் 6 மாதங்களாகக் குப்பைகள் அகற்றப்படாமல் துர்நாற்றம் ஏற்பட்டு, விஷக் காய்ச்சல் மற்றும் சுகாதாரக் கேடு ஏற்பட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அங்கே இன்னும் பாதாளச் சாக்கடை வசதி செய்யப்படவில்லை. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்மூலம் குளச்சல் உப்பளப் பகுதியில் இரண்டரை ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதி வாய்க்கால் பகுதி, தண்ணீர் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. பாம்பூரி வாய்க்கால் தோன்றக்கூடிய பகுதி. அது தகுதியான இடம் இல்லை. திடக் கழிவு செயல்படுகின்ற பகுதி சரியாக இல்லாத காரணத்தினால், அந்தப் பகுதியில் சுகாதாரப் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. மக்கள் குடியிருக்கக்கூடிய பகுதி. அந்த இடத்திற்குப் பதிலாக வேறு ஓர் இடத்தை ஆய்வு செய்து திடக் கழிவுகளைப் போடுவதற்கான ஏற்பாடு செய்யாமல் இருந்தால் நிச்சயமாக அந்தப் பிரச்சினை முடிவுக்கு வராது. ஆகவே குளச்சல் நகரத்தைச் சுத்தமான நகரமாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நகராட்சி அதிகாரிகள் அதற்குரிய எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் வேண்டுவது,* specific interest *எடுத்து, அந்த இடத்தைப் பார்வையிட்டு திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைக் குளச்சல் நகராட்சிப் பகுதிக்கு தகுந்த இடத்தில் ஏற்படுத்திக் கொடுத்து, சுகாதாரத்தை மேம்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் நகராட்சி 24 வார்டுகளை உள்ளடக்கி, 5.18 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதன் மக்கள் தொகை 23,155 ஆகும். இங்கே தினசரி சேகரிக்கப்படும் குப்பை 7 டன் ஆகும். கடந்த 26–2–2008–ல் ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட குளச்சல் கிராமம், புல எண் 2004/1–ல் அமைந்துள்ள 23.93 ஹெக்டேர் உப்பளம் புறம்போக்கு நிலத்தில் 4.05 ஹெக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டது. இந்தக் குப்பைக் கிடங்குப் பிரச்சினை 10 ஆண்டுகளாக இருக்கின்றது. அதன் பின்னர் மேற்படி நிலத்திற்கான வரைபடம் வட்டாட்சியர் அவர்களால் 25–1–2010 அன்று வழங்கப்பட்டது. மேற்படி முன்நுழைவு அனுமதியின் அடிப்படையில் நகராட்சியின்மூலம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (IUDM) 2011–2012, 2012–2013–ல் 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உரம் தயார் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில் இந்நகராட்சிக்குக் குளச்சல் கிராமம் R.S.No.2004/10 ஒதுக்கீடு செய்யப்பட்டு 4.05 ஹெக்டேர் நிலத்தில் முன்நுழைவு அனுமதி கடந்த 6–6–2012–ல் இரத்து செய்யப்பட்டது.

முற்பகல் 11–35

பின்னர், நில ஒதுக்கீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், அரசாணை எண் 97, வருவாய்த் (LD–1) துறை நாள், 23–2–2016–ன்படி அதே இடத்தில் 2 ஏக்கர் நில உரிமம் மாற்றம் செய்ய ஆணை வழங்கப்பட்டது. தற்போது, மேற்படி நிலத்தில், ரூ.178 இலட்சம் மதிப்பீட்டில், ‘தூய்மை இந்தியா’ திட்டத்தில் சிறப்பு திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் 2015–2016 ஆம் ஆண்டில் உரக் கிடங்கு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிலையில், கடந்த 19–2–2017 அன்று மேற்படி உரக் கிடங்கு பகுதியில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து நிலவிய அசாதாரணமான சூழ்நிலைக் காரணமாக, கல்குளம் வட்டாட்சியரால், உரக் கிடங்கு பூட்டப்பட்டு, திட்டப் பணிகள் நிறுத்தப்பட்டு, குப்பைகள் கொட்டுவது நிறுத்திவைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து,

மேற்படி பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, குளச்சல் பங்குச் சந்தை மற்றும் பங்குப் பேரவை நிருவாகிகளுடன் நகராட்சி நிருவாக ஆணையர் மற்றும் மண்டல இயக்குநரால் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் தீர்வு எட்டப்படவில்லை. இந்நகராட்சிப் பகுதி முழுவதும் குப்பைகள் தேங்கி, தொற்றுநோய் ஏற்படும் சூழ்நிலை நிலவியதால், நாகர்கோவில் மற்றும் பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதிகளில் மட்டும் தனியார் நிலங்களில் குப்பைகள் அவ்வப்போது கொட்டப்பட்டன. தற்போது, மேற்படி பகுதிகளிலுள்ள பொது மக்கள் எதிர்ப்புகள் தெரிவித்ததைத் தொடர்ந்து, பிளாஸ்டிக் மற்றும் கழிவுகளைத் தனியாகப் பிரித்து, மக்கும் குப்பைகளை மட்டும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள தனியார் இடங்களில் அவர்களின் விருப்பத்தின்பேரில் கொட்டப்பட்டு வந்தது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாணும் பொருட்டு, ரீத்தாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட உப்பளம் புறம்போக்கு நிலத்தில் குளச்சல் கிராம புல எண் 2004/1–ல் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இரண்டு ஏக்கர் நிலத்துடன் கூடுதலாக 3 ஏக்கர் நிலமும் சேர்த்து, மொத்தம் 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து முன் நுழைவு அனுமதி வழங்கக் கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அனுமதி கிடைக்கப் பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

நகரின் சில பகுதிகளான நகராட்சி பேருந்து நிலையம், நகராட்சியின் பிரதான சாலைகள் மற்றும் சந்தையில் மட்டும் கடந்த சில நாட்களாக அகற்றப்படாமல் இருந்த குப்பைகள் அனைத்தும் இரவு பகலாக துப்புரவுப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு, இன்று 11–7–2017 விடியற்காலை குப்பைகள் முழுவதும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக, நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் 6 நபர்களும், தனியார் பணியாளர்கள் 34 நபர்களும் அமர்த்தப்பட்டனர். மேலும், நகராட்சியின் 2 துப்புரவு வாகனங்களும், 3 வாடகை லாரிகளும், பணியில் ஈடுபடுத்தப்பட்டு, குப்பைகள் முழுவதும் பிரித்து அகற்றப்பட்டுள்ளன. தற்போது, முழுமையாக அக்குப்பைகளை எடுத்துவிட்டோம். அதற்காக, 5 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்குக் கிட்டத்தட்ட கூடுதலாக 1,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார்கள். இன்றைக்கு, அவ்வழியில்

வரக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கியுள்ளார்கள். அதுபோல் பாதாளச் சாக்கடைத் திட்டம் குறித்தும் கேட்டீர்கள். பாதாளச் சாக்கடைத் திட்டம் அனைத்துப் பகுதிகளிலும் நிதிநிலைமையைப் பொறுத்து, படிப்படியாக மேம்படுத்தப்படும். ஆகவே, திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைப் பொறுத்தளவில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில், சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. எங்கு இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தாலும் அவை முழுமையாகச் சரிசெய்யப்படும். இப்பிரச்சினை குறித்து நீங்கள் 2 நாட்கள் raise *செய்தீர்கள். உடனே அங்கு வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கண்டிப்பாக முழுமையான தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. கவன ஈர்ப்பு

(அ) கள்ளக்குறிச்சி, துணை மின் நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.*

திரு. அ. பிரபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*